**தமிழ்நாடு அரசு**

**தேசிய தொழில்நெறி வழிகாட்டுதல் பணி**

அனுப்புநர்
திரு.அ.கலைச்செல்வன்,
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டல் மையம்,
அரியலூர்.

பெறுநர்
Don Bosco (Vazhikkaatti),
46, Siruvallur Road,
Perambur, Chennai -11,
Ph. 044-2670 4491,
Director@donboscovazhikaatti.com

அ 3/ கா.மு.அ 148 /2024 நாள். 27.08.2024.

**அருட்தந்தை,**

| | | |
|---|---|---|
| பொருள் | : | அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம் - தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் - 05.10.2024 அன்று மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரியலூரில் நடைபெறவுள்ளமை - நான்கு சக்கர விளம்பர வண்டி கொடுத்து உதவும்படி கோருதல் - தொடர்பாக. |

-----

அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைநாடுநர்கள் பதிவு செய்து வேலைக்காக காத்து உள்ளனர், இவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித்தேர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தெகை திட்டம், சிறிய அளவிலான தனியார்துறை முகாம்கள் மாதந்தோறும் , பெரிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் ஆண்டுக்கு இருமுறையும் நடத்தப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்ட உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி ஆலோசனைகள், நுழைவுத்தேர்வுகள், கல்வி உதவித்தொகை போன்ற தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி, நுழைவுத் தேர்வுகள், அரசுப் போட்டித்தேர்வுகள், திறன் பயிற்சிகள், கல்விக்கடன், தனியார்துறை வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் வேலைநாடுநர்களுக்கு 05.10.2024 அன்று மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரியலூரில் நடைபெறவுள்ளது. இத்தகவலை அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் வட்டம், உடையார்பாளையம் வட்டம், ஆண்டிமடம் வட்டம், செந்துறை வட்டம், 6 ஊராட்சி ஒன்றியங்கள், கிராம பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் முகாமில் கலந்து கொள்ளும் வகையில் ஊக்குவிக்க தங்களுடைய நான்கு சக்கர விளம்பர வாகனத்தை 01.10.2024 **முதல் 05.10.2024 வரை 5 நாட்கள்** பயன்படுத்தி கொள்ள வாய்ப்பளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

27/8/24

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
அரியலூர்.